# Versol Thervu Seithal – வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்

வேர்ச்சொல்லைப் பற்றி அறிவதற்கு முன் பகுபத உறுப்பிலக்கணங்களை பற்றி தெரிந்து கொள்வது நல்லது.

## சொல்

ஓர் எழுத்து தனித்தேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால் அது சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள்.

பதம் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

### பகாப்பதம்

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும்.

பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நான்கு வகைப்படும்.

- பெயர்ப்பகாப்பதம் – மரம், நாய், நீர்
- வினைப்பகாப்பதம் – உண், காண், எடு
- இடைப்பகாப்பதம் – தில், மன், பிற
- உரிப்பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

(இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்)

### பகாப்பதம்

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும்.

(பகுபதம் – பிரிக்கவியலும் பதம்). பகுபதம் பெயர்ப்பகுபதம் , வினைப்பகுதி என இருவகைப்படும்

பெயர்ப்பகுபதம்: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம் எனப்படும்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| 1. பொன்னன் | பொன் (ன் இரட்டித்தது) அன் + ன் +<br>பொன் என்னும் பொருட்பெயர் அடியாக பிறந்தது. |
| 2. ஊரன் | ஊர் .அன்ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது + |
| 3. ஆதிரையான் | ஆதிரை ய்) ஆன்+ ய் +– உடம்படுமெய்(<br>ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 4. கண்ணன் | கண் (ண் இரடித்தது) ன் + ண் +<br>கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 5. கரியன் | கருமை அன் +<br>கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 6. நடிகன் | நடி க்) அன் + க் +– பெயரிடைநிலை(<br>நடித்தல் என்னும் தொழில்பெயர் அடியாகப் பிறந்தது. |

வினைப்பகுபதம்: பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று வினைப்பகுபதம் எனப்படும்
செய்தான் = செய் + த் +ஆன்

செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும் , 'த்' என்னும் இடைநிலை இறந்த காலத்தையும் ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## பகுதி

சொல்லின் முதலில் நிற்கும் ; பகாப் பதமாக அமையும் ; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.

- படித்தான் – படி என்பது பகுதி
- ஓடினான்ஓடு என்பது பகுதி -
- வந்தான் – வா என்பது பகுதி

## விகுதி

சொல்லின் இறுதியில் நின்று திணை , பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | |
|---|---|---|
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு |

## இடைநிலை

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.

| | | |
|---|---|---|
| வென்றார் | ற்இடைநிலை இறந்தகால- | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

## சந்தி

பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும் ; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் | சந்தி ய், வ் |

## சாரியை

பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும் ; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

விகாரம்

பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம், விகாரம் எனப்படும்.

தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

வேர்ச்சொல்

இப்பகுதி வினாக்களை எளிதில் எதிர்கொள்ள வாக்கியங்களை பிரித்தெழுவதில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

ஒரு வார்த்தையில் வேர்ச்சொல்லை பிரிக்க முடியாது.

வேர்ச்சொல் என்பது பொதுவாக ஏவலாகவோ இருக்கும்

| சொல் | வேர்ச்சொல் |
|---|---|
| அகழந்தான் | அகழ் |
| அகன்று | அகல் |
| அடைந்தோம் | அடை |
| அணிந்தான் | அணி |
| அரிந்து | அரி |
| அரியது | அருமை |
| அறிந்தான் | அறி |

| | |
|---|---|
| அடித்தாள் | அடி |
| அலறள் | அலறு |
| அருளினர் | அருள் |
| அறுந்தது | அறு |
| அறுவடை | அறு |
| அவிந்தது | அவிழ் |
| அறியாது | அறி |
| ஆண்டாள் | ஆள் |
| ஆடினாள் | ஆடு |



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| ஆழ்ந்தார் | ஆழ் |
| இனிது | இனிமை |
| இனிப்பு | இனிமை |
| இயம்பியது | இயம்பு |
| ஈந்தது | ஈ |
| ஈன்றாள் | ஈன்று |
| ஈட்டினான் | ஈட்டு |
| உண்பார் | உண் |
| உழுதான் | உழு |
| உணவு | உண் |
| உறங்கினான் | உறங்கு |
| ஊர்ந்து | ஊர் |
| உருக்கும் | உருக்கு |
| உழுவித்தான் | உழுவி |
| உள்ளம் | உள் |
| உள்ளீடு | உள் |
| எஞ்சிய | எஞ்சு |
| எடுக்கும் | எடு |

| | |
|---|---|
| எண்ணிய | எண் |
| எய்தான் | எய் |
| எடுத்தான் | எடு |
| எழுந்தான் | எழு |
| எழுதினான் | எழுது |
| ஏத்துதல் | ஏத்து |
| ஒட்டுதல் | ஒட்டு |
| ஒழிந்தான் | ஒழி |
| ஒட்டுவிப்பு | ஒட்டுவி |
| ஒட்டியது | ஒட்டு |
| ஓடாது | ஓடு |
| ஓடினான் | ஓடு |
| ஓதியவர் | ஓதி |
| கற்க | கல் |
| கடையல் | கடை |
| கற்றேன் | கல் |
| காட்சியில் | காண் |
| காட்டியது | காட்டு |

| | |
|---|---|
| கண்டு, கண்டனன் | காண் |
| கற்றான் | கல் |
| கடித்தான் | கடி |
| காணாமை | காண் |
| காட்டுவான் | காட்டு |
| காத்தான் | கா |
| காத்தவன் | கா |
| காண்பார் | காண் |
| கூவல் | கூ |
| கேட்க, கேட்டல் | கேள் |
| கொண்டான் | கொள் |
| கொணர்ந்தான் | கொணர் |
| கொன்றதை | கொல் |
| கொடாமை | கொள் |
| குரைத்தது | குரை |
| குடித்தான் | குடி |
| குளித்தான் | குளி |
| கூறினான் | கூறு |

| | |
|---|---|
| கொள்ளுதல் | கொள் |
| கொன்றான் | கொல் |
| கொய்தான் | கொய் |
| சாய்ந்தது | சாய் |
| சாற்றினான் | சாற்று |
| சிரிப்பு | சிரி |
| சரிந்தான் | சிரி |
| சிரித்தான் | சிரி |
| சிதறிய | சிதறு |
| சீரிய | சீர்மை |
| சீத்தாள் | சீ |
| சுட்டது | சுடு |
| சுருட்டினான் | சுருட்டு |
| சூடினான் | சூடு |
| சென்றாள் | செல் |
| செல்வான் | செல் |
| சேர்ந்தான் | சேர் |
| சொன்னான் | சொல் |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| செத்தவன் | சா |
| செய்கிறாள் | செய் |
| சென்றவன் | செல் |
| சோர்வு | சோர் |
| தந்தான் | தா |
| தட்டுவான் | தட்டு |
| தாண்டினான் | தாண்டு |
| தட்பம் | தண்மை |
| தாவியது | தாவு |
| தாழ்வு | தாழ் |
| திறந்தது | திற |
| திருத்தினான் | திருத்து |
| தீயந்தது | தீய் |
| தீர்ந்த | தீர் |
| துறவு | துற |
| தூங்கின | தூங்கு |
| துயின்றான் | துயில் |
| துறந்தான் | துற |

| | |
|---|---|
| தூங்கினார் | தூங்கு |
| தெரிந்தனர் | தெரிந்து |
| தெளிந்தான் | தெளி |
| தேடினான் | தேடு |
| தேற்றினான் | தேற்று |
| தேடல் | தேடு |
| தொழாது | தொழு |
| தோல்வி | தோல் |
| தைத்தான் | தை |
| தொடுவாள் | தொடு |
| தொங்கினான் | தொங்கு |
| தொடர்ந்தாள் | தொடர் |
| தோண்டினான் | தோண்டு |
| தோன்றினான் | தோன்று |
| தோற்றான் | தோல்வி |
| நக்கார் | நகு |
| நட்டான் | நடு |
| நடித்தான் | நட |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| நாடகம் | நடி |
| நாட்டும் | நாட்டு |
| நின்றார் | நில் |
| நின்றோன் | நில் |
| நீங்கி | நீங்கு |
| நீண்ட | நீள் |
| நுகர்ந்தது | நுகர் |
| நெட்டினான் | நெட்டு |
| நேர்ந்தது | நேர் |
| நோக்கம் | நோக்கு |
| நோக்கினான் | நோக்கு |
| நாடிய | நாடு |
| நீங்கி | நீங்கு |
| பட்டான் | படு |
| படித்தல் | படு |
| படிபித்தான் | படிப்பி |
| பருகுவான் | பருகு |
| பழுத்தது | பழு |

| | |
|---|---|
| பாய்ச்சல் | பாய் |
| பார்த்தல் | பார் |
| படுத்தான் | படு |
| பறித்தான் | பறி |
| பற்றினான் | பற்று |
| பாழ்த்த | பாழ் |
| பிணங்கினான் | பிணங்கு |
| பிரித்தார் | பிரி |
| புக்கம் | புகு |
| புகழ்ந்தான் | புகழ் |
| பூண்டான் | பூண் |
| பூசுதல் | பூசு |
| பூப்பு | பூ |
| பொறாமை | பொறு |
| பெற்றாள் | பெறு |
| பொருந்தினான் | பொருத்து |
| பொருந்தின | பொருந்து |
| போனான் | போ |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in